**2026 ஏப்ரல் மாதம் 27– ஆம் தேதி திங்கட்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 41/2021**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 41/2021 | பெயர்: அழகேஸ்வரி<br>க/பெ.பாலசுப்பிரமணியம் | PW1 | 27.04.2026 |

**சாட்சி M.P.9/2026 மனு 08.04.2026ம் தேதி அனுமதிக்கப்பட்டதின்பேரில் அழைக்கப்பட்டு 1 முதல் 5 வரையிலான எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. நான் போடிநாயக்கனூர் கிராம நிர்வாக அலுவலராக எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் சம்பவ சமயத்தில் ஒரு ஆண்டு காலமாக பணிபுரிந்தேன். போடிநாயக்கனூரில் கிராம நிர்வாக அலுவலகம் எங்குள்ளது என்றால் போடிநாயக்கனூர் மின்வாரிய அலுவலகத்திற்கு அருகில் உள்ளது. கிராம நிர்வாக அலுவலகத்திற்கும் போடிநகர் காவல் நிலையத்தில் இடையே எவ்வளவு உள்ளது என்றால் சுமார் 1 கி.மீ. தூரத்திற்கும் குறைவாக இருக்கும். போடிநாயக்கனூரில் எங்கள் அலுவலகத்திலிருந்து பரமசிவம் கோவில் எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு திசையில் உள்ளது. எவ்வளவு தூரம் என்றால் எங்கள் அலுவலகத்திலிருந்து ஒரு கி.மீ. தூரம் இருக்கும்.

2. பரமசிவம் கோவில் போடிநாயக்கனூரில் டவுனில் உள்ளது என்றால் டவுனிற்கு வெளியில் உள்ளது. பரமசிவம் கோவிலின் வாசல் எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு திசையில் உள்ளது. 10.10.2019ம் தேதி மாலை 5.30 மணிக்கு என்னையும், எனது உதவியாளரையும் வழக்கு விசாரணை அதிகாரி எந்த வகையில் என்னை தொடர்பு கொண்டார் என்றால் அலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். அவ்வாறு தொடர்பு கொண்டபோது, 1வது எதிரியிடமிருந்து பரமசிவம் கோவில் அருகில் வைத்து ஒப்புதல்

வாக்குமூலம் பெற வேண்டும் என்று சொன்னார் என்றால் சரிதான். நானும், எனது உதவியாளரும் பரமசிவம் கோவிலுக்கு செல்லும்போது அருண்பாண்டியன், அஜித்குமார், மணிகண்டன் ஆகியோர்கள் போலீசாருடன் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் மூவரையும் ஆய்வாளர் எங்கிருந்து அழைத்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. 1வது எதிரி அருண்பாண்டியன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்றால் காவல் ஆய்வாளர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆய்வாளர் மடிக்கணினி மூலம் தட்டச்சு செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை தட்டச்சு செய்து முடிக்க எவ்வளவு நேரம் ஆனது என்றால் தெரியாது, சாட்சி மீண்டும் 1/4 மணிநேரம் இருக்கும் என்று கூறுகிறார். 1வது எதிரி அருண்பாண்டியன் கொடுத்த வாக்குமூலத்தில் எத்தனை எதிரிகள் கையொப்பம் இட்டார்கள் என்றால் அருண்பாண்டியன் மட்டும் கையொப்பம் செய்தார்.

4. பரமசிவம் கோவிலிருந்து எவ்வளவு தூரத்தில் TN 60 U 8124 TVS Appachi வாகனம் கைப்பற்றப்பட்டது என்றால் கோவிலின் பின்புறத்தில் சிறிது தூரம் இருக்கும். TN 60 F 4702 என்ற வாகனம் என்ன கம்பெனி வாகனம் என்றால் Honda வாகனம் ஆகும். மேற்படி இரண்டு வாகனங்களை கைப்பற்றும்போது நேரம் என்ன இருக்கும் என்றால் இரவு 8 மணி இருக்கும். அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்றாலும், அதில் எத்தனை எதிரிகள் கையொப்பம் செய்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் எழுதினார், மூன்று எதிரிகளும் கையொப்பம் செய்தார்கள். அ.சா.ஆ.2, 1வது அத்தாட்சியில்

யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்ற இடத்தில் யாருடைய பெயர்கள் உள்ளன என்றால் அருண்பாண்டியன் மற்றும் அஜித்குமார் ஆகியோருடைய பெயர்கள் உள்ளன. அ.சா.ஆ.2 ல், 2 வது அத்தாட்சியில் மூன்று எதிரிகளும் கையொப்பங்கள் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5. ஆண்டி ஓடை பரமசிவம் கோவிலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 2 கி.மீ. தூரம் இருக்கும். போடிநாயக்கனூர் பரமசிவம் கோவிலில் வாக்குமூலம் பெற்று, அத்தாட்சி தயார் செய்ய எவ்வளவு நேரம் அங்கு இருந்தோம் என்றால் அரைமணி நேரம் இருக்கும். ஆண்டி ஓடை எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி உள்ளது என்றால் வடக்கிலிருந்து தெற்கே உள்ளது. நானும், ஆய்வாளரும், எதிரிகளும் எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நானும், எனது உதவியாரும் வழிப்போக்கு ஆட்டோவில் சென்றோம், எதிரிகளும் ஆய்வாளரும் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றாலும், வாகனத்தின் எண் என்ன என்றால் எனக்கு தெரியாது.

6. புன்கை என்ற மரம் உள்ளதா என்றால் உள்ளது, அதன்பெயர் புங்கை ஆகும். ஆண்டி ஓடைக்கு எந்த திசையில் வைத்து புங்கை மரக்குச்சிகள் கைப்பற்றப்பட்டது என்றால் ஞாபகமில்லை. புங்கை மரக்குச்சிகளின் நீளம், தடிமன் பற்றி அ.சா.ஆ.3 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் அடி கணக்கில் 2.50 அடி நீளம் ஆகும். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சொத்தின் விபரம் என்ற இடத்தில் புன்கை மரம் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், நீளம், அகலம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மூன்று குச்சிகளும் யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, மூன்று எதிரிகளிடமிருந்தும் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

7. எந்தெந்த எதிரிகளிடமிருந்து எந்தெந்த குச்சிகள் கைப்பற்றப்பட்டது என்று தனித்தனியாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை தயார் செய்து முடிக்க இரவு 9 மணி ஆகியிருக்கும் என்றால் சரிதான். அங்கிருந்து எத்தனை மணிக்கு நான் அலுவலகம் சென்றேன் என்றால் இரவு 9.30 மணிக்கு மேல் இருக்கும். பிச்சாங்கரை சொக்கநாதர் கோவில் எங்கள் அலுவலகத்திலிந்து எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு திசையில் உள்ளது. 12.10.2019 ம் தேதி ஆய்வாளர் தருமர் என்னை எத்தனை மணிக்கு இந்த வழக்கு சம்பந்தமாக தொடர்பு கொண்டார் என்றால் மாலை 5.30 மணி இருக்கும்.

<u>அரசு தரப்பில் மறுவிசாரணை</u>

8. கடந்த 12.10.2019 ம் தேதி போடிநாயக்கனூர் பிச்சாங்கரை சொக்கநாதர் கோவில் அருகில் மறைந்திருந்த எதிரிகள் இருவர் 4 வது எதிரி குமார் (எ) வீரக்குமார் மற்றும் 5 வது எதிரி ரவிசுந்தர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். 4 வது எதிரி குமார் (எ) வீரக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். எனது உதவியாளர் சாந்தக்குமாரியும் கையொப்பம் செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்கமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான், அது **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தயார் செய்த அத்தாட்சியில் நானும், எனது உதவியாரும் கையொப்பம் செய்தோம்.

9. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஒப்புதல் வாக்குமூலம் 12.10.2019 ம் தேதி மாலை 4.15

மணிக்கு தயார் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள TN 57 E 1678 பதிவு எண் கொண்ட பஜாஜ் பாக்ஸர் இருச்சக்கர வாகனம் எதிரி குமார் (எ) வீரக்குமாரிடமிருந்து காவல் ஆய்வாளர் கைப்பற்றிய வாகனமாகும். அது **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

10. 12.10.2019ம் தேதி என் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட வாகனத்தை புகைப்படங்கள் எடுத்ததை எனது முதல் விசாரணையிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.9 அத்தாட்சியில் வாகனத்தின் நிறம், புகைப்படமோ எடுக்கப்பட்ட விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். போடிநகர் ஆய்வாளர் தருமர் தாக்கல் செய்த வழக்கில் எத்தனை முறை சாட்சியாக இருந்துள்ளேன் என்றால் இந்த வழக்கில் மட்டும் தான் சாட்சியாக இருக்கிறேன். எதிரி குமார் (எ) வீரக்குமாரை ஆய்வாளர் எங்கிருந்து அழைத்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொன்னவாறு, சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், போலீசாருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. நான் சொன்னவாறு, சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் 1 முதல் 3 எதிரிகளிடமிருந்து சா.பொ.1 புங்கை மரக்குச்சிகள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 எதிரிகளிடமிருந்து எந்தவொரு இருச்சக்கர வாகனமும் ஆய்வாளர் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த ஒப்புதல் வாக்குமூலம்

மற்றும் அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 27.04.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.04.27 15:33:48 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
27.04.2026